# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 5/PW- 5 |
| Name | : திரு. சிவா (தலைமை காவலர் 265) |
| Father/Husband's Name | : செங்கல்வராயன் |
| Village | : மேல்மருவத்தூர் காவல் நிலையம் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது தலைமை காவலராக மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் குற்ற எண்.18/2022 செங்கல்பட்டு சைபர் கிரைம் காவல் நிலைய வழக்கில் மகஜர் சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். சாட்சியிடம் பார்வை மகசர் காண்பிக்கப்பட்ட போது அதிலுள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். 29.05.2022 அன்று பிற்பகல் 2,00 மணியளவில் கல்பாக்கம் டவுன்சிப்பில் உள்ள வனஜா என்கிற எதிரியின் வீட்டின் அவரது பெட்ரூமில் வைத்து போட்டேன். **அந்த கையொப்பம் அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் தலைமை காவலர் டேனியல் என்பவரும் கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் மேற்குறிப்பிட்ட தேதியில் எத்தனை ஆண்டுகள் காவல் துறையில் பணிபுரிந்தேன் என்று கேட்டால் 19 ஆண்டுகள். காவல் நிலையத்தை விட்டு அலுவலக

சம்மந்தமாக வெளியில் செல்லும் போது காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் ஜெனரல் டைரியில் பதிவு செய்துவிட்டு செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். அந்த ஜெனரல் டைரியை பார்த்தால் நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி நான் எதிரியின் வீட்டிற்கு சென்றேனா இல்லையா என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரிதான்.

பொதுவாக தினசரி அலுவலக பணிகள் குறித்து பாக்கெட் டைரியை மெயின்டென் செய்து அறிக்கையினை காவல் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். 2022 வருடத்தில் அந்த பாக்கெட் டைரியை பார்த்தால் எதிரியின் வீட்டிற்கு நான் சொன்ன நேரத்தில் சென்றோ என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். 29.05.2022 தேதிக்கு முன்பு எதிரியின் வனஜா வீடு எங்குள்ளது என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரியின் வீடு எத்தனை அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடையே உள்ளது என்று கேட்டால் பக்கத்தில் அடுக்கு மாடி குடியிருப்புகள் எதுவும் இல்லை அந்த வீடு தனி காம்பவுண்டில் உள்ளது. சுமார் எவ்வளவு நேரம் அங்கிருந்தோம் என்று கேட்டால் சுமார் இரண்டு மணிநேரம். பக்கத்தில் குடியிருப்புகள் இருந்ததா என்றால் 50 மீட்டர் இடைவெளி விட்டு தள்ளியிருந்தது. ரோடு தாண்டி கட்டிடங்கள் இருந்தது வீடா என்று தெரியவில்லை.

அந்த இடத்தில் சிஆர்பிஎப் பணியாளர்கள் அங்கு ரோந்து பணியிலிருப்பார்கள் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது நாங்கள் செல்லும் போது யாரும் வரவில்லை. சுமார் எத்தனை பேர் அங்கிருந்தோம் என்று கேட்டால் 4 பேர்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை எங்கு, எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்று கேட்டால் அதே தேதியில், அதே இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

*" 29.05.2022 அன்று பிற்பகல் 2,00 மணியளவில் கல்பாக்கம் டவுன்சிப்பில் உள்ள வனஜா என்கிற எதிரியின் வீட்டின் அவரது பெட்ரூமில் வைத்து போட்டேன்."* என்ற விவரத்தினை ஆய்வாளர் விசாரணையின் போது கூறினேனா என்றால் கூறினேன். நான் அவ்வாறு விசாரணையின் போது கூறவில்லையென்றாலும், ஆய்வாளரிடம் கூறாத விவரத்தை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கை வலுபெற வைப்பதற்காக அறிவுறுத்தலின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கல்பாக்கத்தில் தனியாக காவல் நிலையம்

உள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் 29.05.2022 அன்று பகல் 02.00 மணியளவில் வனஜா வீட்டிற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அங்கு எந்த கையொப்பமும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 09.11.2022 அன்று காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.